# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




**பாசுரம்-4**

**என்னைப்புவியில் ஒரு பொருளாக்கி* மருள்சுரந்த**
**முன்னைப்பழவினை வேரறுத்து* ஊழிமுதல்வனையே**
**பன்னப்பணித்தவிராமானுசன் பரன்பாதமுமென்**
**சென்னித்தரிக்கவைத்தான்* எனக்கேதுஞ்சிதைவில்லையே.**



**பாசுரக் கருத்து**

“அடிக்கீழ்ச் சேர்த்த நெஞ்சு, நின்றவா நில்லாத பழக்கம் உடையது ஆதலால் அந்நிலையினின்றும் நழுவிவிடில், உம்நிலை என்னாவது என்று கேட்க, எம்பெருமானார் தனது நிர்ஹேதுக க்ருபையாலே கண்டு கொண்டென்னைப் பண்டை வல்வினையை வேரறுத்துத் தம் திருவடிகளை என் சென்னியில் வைத்திடலால், எனக்கு ஒரு குறையும் வர வழியில்லை என்கிறார். முன்பு “ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே” என்று உபாயம் தெரியவில்லை என்றார். இப்பொழுது எம்பெருமானாரே உபாயம் என்று தெளிந்து காட்டுகிறார்.

**பதவுரை**

என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி: பகவத் விஷயத்துக்கும் கூட ஆளாகாதபடி, உலகியல் இன்பத்திலே உழன்றபடியால், பெரியோர்களால் ஒரு பொருளாக மதிக்கத் தகாத என்னைக்கூட எங்ஙனம் பொருளாக்கினாரோ எம்பெருமானார் என்று வியக்கிறார்.

**பாசுர அர்த்தம்**

காலம் முதலிய சகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான எம்பெருமானையே ஸ்ரீபாஷ்யத்தின்

வாயிலாக அருளிச் செய்த மேம்பாடு உடையவரான எம்பெருமானார்,பொருளல்லாத என்னை, உலகில் ஒரு பொருளாக ஆகும்படி பண்ணி, அஞ்ஞானத்தினால் பெருகின அநாதியான கர்மங்களை, வேரோடே அறுத்து தமது திருவடிகளையும் எனது தலையிலே, நான் உகந்து தரிக்கும்படியாக வைத்தருளினார்.வினை வேரறப் பாதம் தரித்த எனக்கு, இந்நிலையில் ஒரு குறையும் இல்லை.

## பாசுரம்-5



எனக்குற்ற செல்வ மிராமானுசனென்று* இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில் புகழ்* அவன் மன்னியசீர்
தனக்கு உற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றுமென்பா
இனக்குற்றம் காணகில்லார்* பத்தியேய்ந்த இயல்விதென்றே.

### பாசுரக் கருத்து

“எம்பெருமானார் ஸம்பந்தமற்றவர்கள் இகழுவரேல் அது நமக்குப் புகழ் தான். அந்த ஸம்பந்தம் உடையவர்களோ இகழார். ஆதலின் யான் துதி செய்தல் கூடும் என்பது கருத்து.

## பதவுரை


**எனக்குற்ற செல்வம் இராமானுசன்:**
இராமானுசரே செல்வம். இராமானுசர் ஸம்பந்தம் உண்டு எனில், பிறவித்துயரால் நசிக்கும்

ஆன்மதத்துவம்(உயிர்) ஸத்தைப் பெற்றுத் தளிர்க்கும்.செல்வம்,தான் பயனாவதோடு, பயனைப் பெறுவதற்கு ஸாதநமுமாவது போல, இராமானுசர் பெறத்தக்க பேறாவதுடன், ஸாதநமுமாய் இருப்பதால் செல்வமாக உருவகம் செய்கிறார். ஏனைய செல்வம் கெட்ட அஹங்கார மமகாரங்களை உண்டு பண்ணுவதால் அது உற்ற செல்வம் ஆகாது.இராமானுச செல்வமோ, உயிர் ஸத்தைப் பெற்று தரிப்பதற்கு ஏதுவாக இருப்பதால் உற்ற செல்வமாயிற்று.

## பாசுர அர்த்தம்

என் ஸ்வரூபத்திற்கு தக்க ஸம்பத்து, எம்பெருமானாரென்று, ஏற்றுக் கொள்ளமாட்டாத, மனத்தின் கண் குற்றம் உடைய மனிசர் இந்நூலைப் பழித்தால் அதுவே இதன் புகழ் ஆகும். எம்பெருமானாரின் குணங்களில் ஈடுபடும் அன்புடையவர்கள், பக்தியோடு பொருந்திய முயற்சியுடையது என்கிற காரணத்தால், அந்த எம்பெருமானாருடைய திருநாமங்களை கூறும் இப்பாசுரங்களில் குற்றம் காணமாட்டார்.

## பாசுரம்-6



**இயலும் பொருளும் இசையத்தொடுத்து* ஈன்கவிகளன்பால்**
**மயல்கொண்டு வாழ்த்தும் இராமானுசனை* மதியின்மையால்**
**பயிலுங்கவிகளில் பத்தியில்லாத என் பாவி நெஞ்சால்**

முயல்கின்றனன்* அவன்தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே.

**பாசுரக் கருத்து**

**ஈன்கவிகள் எம்பெருமானார் மேல் உள்ள அன்பினால், மங்களாஸாசனம் செய்தார்கள். மதியின்மையால், கொடிய வல்வினையேன் எம்பெருமானாருடைய கீர்த்தியைப் பாடப் புகுந்தேன் என்கிறார்.**

**பதவுரை**

**அவன் தன் பெருங்கீர்த்தி:**

**அவன் கீர்த்தி என்று கூறாமல், அவன் தன் பெருங்கீர்த்தி என்றது, எம்பெருமானார் ஒருவர்க்கே பெருங்கீர்த்தி உரியது.**

**பாசுர அர்த்தம்**

**இனிய கவிஞர்கள், எம்பெருமானாரிடம் கொண்ட பேரன்பினாலே மயங்கி, சொல்லும்,அச்சொல்லின் பொருளும் பொருந்தும் சிறந்த கவிதைகளைத் தொடுத்து, மங்களாஸாசனம் செய்வர். புத்தி இல்லாத அடியேனும், பக்தி இல்லாத எனது கொடிய நெஞ்சினால், இப்பாடல்களில் எம்பெருமானாருடைய அளவற்ற பெருமைகளை பேச முயல்கின்றேன். என்னே இது!.**

**பாசுரம்-7**




**மொழியைக்கடக்கும் பெரும்புகழான்* வஞ்சமுக்குறும்பாம்**
**குழியைக் கடக்கும் நம்கூரத்தாழ்வான் சரண் கூடியபின்***

பழியைக்கடத்தும் இராமானுசன்புகழ்பாடி அல்லா
வழியைக் கடத்தல்* எனக்கு இனியாதும் வருத்தமன்றே.

**பாசுரக் கருத்து**

தான் பேறு பெற்றது ஆழ்வான் திருவடி ஸம்பந்தத்தாலே என்கிறார் இப்பாசுரத்தில்.ஆச்சார்ய அக்ரேசரும், சிஷ்ய அக்ரேசரும் கூரத்தாழ்வான் தான் என்று உணர்த்துகிறார்.

**பதவுரை**

மொழியைக் கடக்கும் பெரும்புகழான்:
தான் ஆச்ரயித்த ஆழ்வானை வர்ணிக்கிறார். ஆழ்வானிடமுள்ள குணங்கள் மொழியைக் கடந்துள்ளன. ஆழ்வானை மொழியைக் கடக்கும் பெரும்புகழானாக வருணிப்பது எங்ஙனம் பொருந்தும் எனில், பரப்ரம்மத்தின் ஆனந்தமும் மற்றைக் குணங்களும், பற்றற்ற ச்ரோத்ரியனான ஆழ்வானுக்கும் உண்டு என்பதால். நான் பெற்ற பேறு நாலூரானும் பெற வேண்டும் என்று பகைவர் திறத்தும் காட்டும் பரம கிருபை முதலிய ஆழ்வான் குணங்களை எவரால் அளந்து பேச முடியும்.

வஞ்ச முக்குறும்பாம் - முக்குறும்பு என்பது குலசெருக்கு, கல்விச்செருக்கு, ஒழுக்கத்தால் வரும் செருக்கு.

குழியைக் கடக்கும்: ஆழ்வான் உயர் குலத்தினராயும், கல்வியிற் கரைகண்டவராயும், நல்லொழுக்கம் வாய்ந்தவராயிருப்பினும் இவற்றால் வரும் செருக்குக்கு இடந்தராமையின், இக்குழியைக் கடந்தவர் என்கிறார். குழியைக் கடத்தும் என்றும் ஒரு பாடம் உண்டு. அப்போது தன் சரண் கூடினாரையும், இப்படுகுழியில் விழாமல் தாண்டுவிப்பார் என்பது பொருள்.

நம் கூரத்தாழ்வான்: கூரத்தாழ்வான் அவதாரமே, தன்னை உத்தரிபிக்கத்தான் என்பதனால் நம் கூரத்தாழ்வான் என்கிறார்.

**பாசுர அர்த்தம்**

பேச்சிற்கு அப்பாற்பட்ட பெரும் புகழ் வாய்ந்தவரும்,கல்வி,ஒழுக்கம், குலம் ஆகிய மூன்று செருக்குகளாகிய குறும்பைக் கடந்தவரும், நம் ஸ்வாமியான கூரத்தாழ்வானுடைய திருவடிகளை

அடைந்ததற்கு பிறகு, வினைகளை நீக்கும் எம்பெருமானாருடைய நற்குணங்களைப் பாடி, ஸ்வரூபத்திற்கு தகாத தீயவழிகளில் விழாது தப்பிச் செல்லுதல் அடியேனுக்கு எளிதாம்.

## பாசுரம்-8




வருத்தும் புறவிருள் மாற்ற* எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி* ஒன்றத்
திரித்து அன்று எரித்த திருவிளக்கைத் தன் திருவுளத்தே
இருத்தும் பரமன்*இராமானுசன் எம்மிறையவனே.

**பாசுரக் கருத்து**

கீழ் ஏழு பாட்டுக்களும் முகவுரையாய் அமைந்தன.அவைகளும் எம்பெருமானார் பற்றிய துதிகளாகவே அமைந்தன.இனி, எம்பெருமானார் பெருமைகளில் ஆழ்வார் சம்பந்தமே சிறந்து விளங்குவது ஆதலின், அதனைப் பேச முற்பட்டுப் பொய்கையாழ்வார் அருளிச் செய்த திவ்ய பிரபந்தத்தை

தம் சிந்தையிலே அநுசந்தித்துக் கொண்டேயிருக்கும் பெருமையைக் கூறி அத்தகைய எம்பெருமானார் எங்களுக்கு இறையவர் என்கிறார்.

**பதவுரை**

புறவிருள்: வெளியே உள்ள கண்ணுக்குப் புலனாகும் பொருளைப் பற்றிய இருள்(அஞ்ஞானம்) புறவிருள்.

இதயத்திருள் : நெஞ்சென்னும் உட்கண்ணுக்குப் புலனாகும் ஜீவான்மாவையும் அதனுள் உள்ள பரமான்மாவையும் பற்றிய அறியாமை அக இருள்.

**பாசுர அர்த்தம்**

வருத்தத்தை உண்டு பண்ணும் வெளியே உள்ள பொருள்களைப் பற்றிய அறியாமையைப் போக்க, எங்களுடைய பொய்கையாழ்வார் என்னும் உபகாரகர், வேதாந்தத்தினுடைய அர்த்தத்தையும்,செவ்விய தமிழ்ச் சொல்லையும் இணைத்து, ஒன்றாய் சேரும்படியாக திரியாக்கி, திருக்கோவலூர் இடைகழியிலே நெருக்குண்ட வேளையில், எரியும்படி செய்த வையந்தகளியா என்று தொடங்கும் திவ்யபிரபந்தமாகிய திருவிளக்கை, தம்முடைய இதயத்திலே வைத்துக் கொண்டிருக்கும் பெருமை வாய்ந்தவரான எம்பெருமானார் எங்களுக்குத் தலைவராவார்.

---